Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953,

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுளூ ஆடி மீ ௩உ வெள்ளிக்கிழமை (19 July, 1963) [இல-கசு]

நேயர்கள் நெஞ்சம்

### திருக்கேதீச்சரத்தில்

## நவராத்திரியும் கந்தசஷ்டியும்

—————:0:—————

அண்மையில் இந்துசாதனம் பத்திரிகையில் திரு. க. வைத்தியநாதன் அவர்கள் தருமபுர ஆதீன வேதசிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் எஸ் சுவாமிநாதசிவாச்சாரியாரும், அச்சுவேலி பிரம்மஸ்ரீ ச குமாரசாமிக்குருக்கள் அவர்களும் எழுதிய பிரமாணங்களை ஆதாரமாகக் கொண்டு தாம் திருக்கேதீஸ்வரத்தில் இவ்வருடம் ஐப்பசி மீ 1உ நவராத்திரியையும், கார்த்திகை 1உ ஸ்கந்த ஷஷ்டியையும், மாசி மீ 29உ மகா சிவராத்திரியையும் கொள்ளப்போவதாக வெளியிட்டிருக்கிறார்.

மேற் குறிக்கப்பட்ட இரு பெரியார்களும் புரட்டாதிமீ 1உ ஒரு அமாவாசையும், 31உ ஒரு அமாவாசையும் வருவதால் அம்மாதம் அதிக மாத தோஷமுள்ளதென எழுதியிருக்கிறார்கள். ஆனால் எப் பஞ்சாங்கத்தில் அவ்விதம் வருகிறது என்பதைக் குறிக்காதுவிட்டது ஏனோ? வாக்கிய பஞ்சாங்கப்படியென வெளியிட்டால் திருக்கணித அபிமானிகள் தங்கள் கூற்றுகளை ஆதரிக்கமாட்டார்கள் என நினைத்துப்போலும்!

கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் மடத்துப் பஞ்சாங்கம் சென்னை S. R. மணி பஞ்சாங்கம் இந்திய அரசினர் பஞ்சாங்கம மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கம் ஆகியன புரட்டாதியில் 30 நாட்களெனவும் அம்மாதத்தில் ஒரு அமாவாசை எனவுங் குறிப்பிடுகின்றன. ஆகவே குறித்த புரட்டாதி மாசத்தில் அதிமாத தோஷமில்லையென்பதைப் பெரியார்கள் நன்கு அவதானிப்பார்களாக மேற் குறிக்கப்பட்ட பஞ்சாங்கங்கள் இந்திய பஞ்சாங்க சீர்திருத்த சபையினரால் சரியெனக் கைக்கொள்ளப்பட்டன என்பதையும் வாக்கிய பஞ்சாங்கங்கள் யாவும் புராதன காலத்தில் இயற்றப்பட்ட வாக்கியங்களைத் திருத்தாமல் உபயோகித்துக்கணிப்பதால் அவை தற்காலத்துக்குச் சரிவராதென்று விலக்கப்பட்டன என்பதையும், கலாநிதி ஸேர். ஸி. பி. இராமசுவாமி ஐயர் கே. ஸி. எஸ். ஐ. அவர்களும், காலஞ்சென்ற ஜோதிர்பூஷணம் டக்டர். வி. வி ரமண சாஸ்திரிகள் எம். ஏ. பிச். டி. எவ். ஆர் ஏ. எஸ். அவர்களும் கல்லடி சோதிட மகாநாடு; மைசூர் வானசாஸ்திர மகாநாடு ஆகியனவும் 'வாக்கிய பஞ்சாங்கம் தற்காலத்திற்குச் சரிவரா'தெனக் கூறியிருப்பதையும் இரு பெரியார்களும் தேவஸ்தான அதிபர்களும், மற்றையோரும் அறியக் கடவர்.

மேலும் முற்கூறப்பட்ட பஞ்சாங்கங்களின்படி ஐப்பசி மாதம் 1உ யிலும் 30உ யிலும் இரு அமாவாசைகள் வருவதால் அம்மாதம் அதிக மாததோஷமுடையதாயிற்று. ஆகவே அதிகமாத தோஷமில்லாத புரட்டாதி மீ 2உ புதன்கிழமை நவராத்திரி ஆரம்பத்தையும் 30உ புதன்கிழமை தீபாவளியையும்; கார்த்திகை 2உ ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தஷஷ்டி ஆரம்பத்தையும் கொள்வதே சாஸ்திர சம்மதமாகும்,

இனி மஹாசிவராத்திரி எப்பொழுது அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்பதை ஆராய்வாம்.

உத்தரகாரணாகமம் சிவராத்திரி விதிப்படலத்தில் சிவராத்திரியைச் சௌரமானப்படிதான் கொள்ளவேண்டும். சாந்திரமானப்படி கொள்ளக்கூடாதென்று முதல் வரிசையில் சொல்லிவிட்டு அடுத்த வரிசையில் சௌரமானம் சிவபெருமானுக்கு எவ்வளவு விசேடமுடையதோ சாந்திரமானமும் அவ்வளவு விசேடமுடையது எனச் சொல்லியிருக்கிறார்.

சூரிய சித்தாந்தத்தில், திதி, கரணம் விவாஹம, வபனம், உபவாஸம் முதலியவைகளும் பிற கருமங்களும சாந்திரமானத்தால்கொள்ளப்படவேண்டுமெனவும்,

காரணாகமத்தில், சாந்திரமானப்படியே விரதம் முதலிய எல்லாவற்றையுங் கொள்ள வேண்டுமெனவும் கூறியிருப்பதால் (சாந்திர) மாகமாதம் சிவராத்திரிக்கு விசேடமுடையதென்பது புலனாகிறது.

இக்காரணம் பற்றியே (சௌரமான) மாசியில் வரும் (சாந்திரமான) மாககிருஷ்ண சதுர்த்தசியில் மஹாசிவராத்திரி பஞ்சாங்கங்களில் குறிக்கப்பட்டு வரலாயிற்று.

ஆனால் நிகழும் சோபகிருது வருடத்திலும், முந்திய தாரண (1944—45), குரோதன (1925—26), பராபவ (1906 — 07), சர்வஜித் (1887—80) ஆகிய வருடங்களிலும் மாசி மாதத்திற் குறிக்காது தை மாதத்தில் வரப்பெற்ற மாககிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

தொடர்ச்சியாக 18 வருடங்கள் மாசிமாத கிருஷ்ண சதுர்த்தசியில் மஹா சிவராத்திரியைக் குறித்த பஞ்சாங்க கணிதர்கள் 19வருடங்களுக்கு ஒருமுறை தை மாதத்தில் குறித்ததற்குரிய காரணத்தைத் தெரிவிப்பாம்.

சௌரமாசமும், சாந்திர மாசமும் இணைந்து வரினும் 32 சௌரமாசங்களில் ஒரு அதிக சாந்திரமாசம் வரும்: 19 வருடத்திற்கு ஒருமுறை பங்குனி (மீன) மாதத்தில் அதிக சைத்ரம வரும், அப்போது மாசி (கும்ப) மாதத்தில் பாற்குணமும், தை (மகர) மாதத்தில் மாகமும் வரப்பெறும். அதேபோல இவ்வருடம் தை மாதத்தில் மாகமாசம் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இனி 19 வருடத்திற்கு ஒருமுறை தை மாதத்தில் வரும்

தொடர்ச்சி 2ம் பக்கம்

### நற் சிந்தனை

—:—

எல்லா உயிரினும்
நில்லாமல் நிற்பவனை
நினைந்து நினைந்துருகி
நிற்பதுவு மெக்காலம்.

### நயினாதீவு நாகபூஷணி அம்பாள் உற்சவம்

சப்ததீவு இந்துமகாசபையினா நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய தெற்கு வீதியில் யாத்திரீக குழந்தைகளுக்கு இறுதி நான்கு நாட்களுக்கு இலவசமாகப் பால் வினியோகம் செய்தனர். உற்சவ காலங்களில் சமயப் பிரசங்கங்களும் நடைபெற்றன சபையின் வேண்டுகோட்கிசைந்து தமிழ், ஆங்கில இந்துசாதனப் பத்திராதிபர் ஸ்ரீமான். நம, சிவப்பிரகாசம் அவர்கள் "சைவ சமய நெறி" என்னும் பொருளில் அங்கு கூடியிருந்த அடியார்களுக்கு வெகு பத்திசிரத்தையுடன் விரிவாகச் சொற்பொழிவாற்றினர். பின்னர் சைவப்புலவர் திரு. சோமசுந்தரம் அவர்களும பிரசாரம் நிகழ்த்தினர்- முடிவில் ஆலய தர்மகர்ததா சபைத்தலைவர் ஸ்ரீமான்: செ. சுவஞானம், காரியதரிசி அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினர்.

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் சேங்கண்மால் விடையோன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே,

x x x

ஊனாகியூனுளாவிராயுயிர்தோறுமாகி
வானாதியானபோருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## சுவாமி சிவானந்தர் சிவ பதம் எய்தினர்

### உலகெங்குமுள்ள சீடர்கள் கலக்கம் அடைந்தனர்

இமயத்து ரிஷிகேசத்தில் பல ஆண்டுகளாக இயங்கி வரும் திவ்விய ஜீவன சங்கத்தை நிறுவி உலகெங்கணும் தெய்விக உணர்ச்சியை ஒளிவிடச் செய்த அருள்நிறைந்தவரும் ஆத்மஞானியும் இந்துமதத் தத்துவஞானியுமான சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு மாரடைப்பு நோய் காரணமாக இறைவனடி சேர்ந்தார்.

சுவாமி அவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த திருநெல்வேலியில் அப்பைய தீட்சிதர் பரம்பரையில் உதித்த தமிழர். இவர் மருத்துவத்தில் புலமை பெற்று மலாயா சென்று மருத்துவப் பணி புரிந்தவர். அத்தொழிலிலிருந்து ஓய்வு பெற்றுத் துறவு வாழ்வை மேற்கொண்டு, கடந்த பல ஆண்டுகளில் உலகின் பல பாகங்களிலும் தமது அருட் பெருமையால் சீடர்களைப் படைத்துக்கொண்டுள்ளார்.

இந்துசாதனம் ஆங்கில தமிழ்ப் பதிப்புககளில் இவர் அருட்செய்திகள் தாங்கி வரும் கட்டுரைகள் காலந்தோறும் வெளி வந்திருப்பது அன்பர்கள் அறிந்ததே.

—

### நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் கதிர்காம உற்சவ விழா

—

21-7-63ஞாயிற்றுக்கிழமை முதல் 5-8-63 திங்கட்கிழமை வரையுள்ள 16 நாட்களிலும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் கதிர்காம உற்சவ விழா நடைபெறும்,

5-8-63 திங்கட்கிழமை காலை சங்காபிசேகமும், நண்பகல் சண்முக தீர்த்த மண்டபத்தில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். ——

### கோணேசராலய பரிபாலன சபைப் பொதுக்கூட்டம்

—

மகாசபைக்கூட்டத்தின் தீர்மானத்தின்பிரகாரம் "சைவப் பெருமக்கள் மகாசபை" 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை 21-7-63மு,ப, 10மணியளவில் திருக்கோணமலை கோணேசராலய மண்டபத்தில் மூகாந்திரம் த. பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

—

### நாக பாம்பால் கடியுண்டார்

—

யாழ்ப்பாணம் கலட்டி அரசினர் மரக்காலைத் தொழிலாளியும், கண்டியைச் சேர்ந்தவருமாகிய S. V. மார்ட்டின் என்னும் சிங்களவரை நாக பாம்பு தீண்டியது. அயலவரின் உதவியுடன் அறிவற்ற நிலையில் உடனடியாக, பாம்பு கடி நிபுணர் திரு. க. சிற்றம்பலத்திடம் கொண்டுவரப் பெற்றுத் தக்க சிகிச்சை முறையால் நான்கு நாட்களின் பின்னர் குணம் பெற்றார், தனக்கு இங்கு உற்றார் உறவினர் இல்லாத நிலையில் அயலிலுள்ள தமிழ் மக்கள் தனக்குச்செய்த உதவியையும், வைத்தியரின் அன்பான சிகிச்சை முறைகளினால் தன் உயிர்காத்த நன்றியையும், தமிழ்மக்களின் தன்னலமற்ற உற்ற இடத்தில் உதவி புரியும் பண்பையும் புகழ்ந்து வாழ்த்திச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ஹூ ஆடி மீ
௩ உ வெள்ளிக்கிழமை

## சமயப் போதனையே சிறந்த சாதனம்

கல்விமுறையின் போக்கு என்ன என்று பலர் கலங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையிலே சைவாசிரியர் சங்கத்தின் அரிய முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதாகும். சிறந்த சைவ சீலத்தைக் கல்விக் கழகங்கள சைவ மாணுக்கர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்கு சமய போதனை அத்தியாவசியம் என்றும், அப்போதனையும் சைவநூற் றெளிவும் பயிற்சியும் ஒழுக்கமும் இறைவழிபாடும் உரிய ஆசிரியர்களாலே அமைய வேண்டும் என்றும் இச் சங்கத்தினர் முடிவு செய்தமை மிகப் பொருத்தமானது. அவ்வமையம் அங்கு ஊக்க உரை நிகழ்த்திய உதவி வித்தியாதிபதி திரு. சோமசேகரம் அவர்கள் இக்கருத்தை நன்கு வெளியிட்டிருப்பது மேலும் நம்பிக்கையை அளிக்கின்றது.

வாழ்க்கையின் பயனை நல்லவண்ணம் அடைவதற்குச் சமயம் வேண்டும். அதிலும் "சைவ சமயமே சமயம்" என்று எல்லோராலும் புகழ்ந்து போற்றப்பெறும் சைவ சமயத்தைச் சார்ந்த மாணுக்கரின் வாழ்வு புனிதமான நிலைமை யுறுவதற்குக் கல்வி அதற்கேற்ப, செம்மை யுடைய தாயிருத்தல்இன்றியமையாததொன்றென ஆசிரியர்களும், பெற்றோரும் சமயப்பணி செய்யும் சங்கங்களும் தொண்டர்களும் கல்விப் பகுதியாரும் ஒருங்கு சேர்ந்து எண்ணுவதே பெரிய காரியமாகும்.

சமயபாடக்கல்வி ஆலோசனைச் சபையிலே தொன்றுதொட்டுச் சைவப்பணியாற்றி வரும் சைவ பரிபாலன சபையும், இப்பொழுது நன்கியங்கி வரும் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம், சைவ இளைஞர் மத்திய மகாசபை போன்றவைகளும் அங்கத்துவம் வகித்தல் வேண்டப்பெறும். சைவசமய நெறிச் சாதனை கல்விக்கழகங்களில் கட்டாயயாயிருத்தல் அவசியம். திருமுறைகள் ஓதும் நெறி இன்றியமையா திருத்தல் வேண்டும். சைவப் பெரியார்கள் அறிஞர்கள் சபைகள் யாவரும் இந்த எண்ணத்தைத் தொடர்ந்து செயலாற்றும் நற்சேவை புரிவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்வார்களென்று எதிர்பார்க்கின்றோம். கல்விக்கழகங்களில் மட்டுமல்ல ஆலயங்களிலும் இந்தத் திருத்தொண்டு செய்யப்பெறுவதற்கு இவ்விதப் பணியைப் பயனபடுத்துவதும் அவசியமாகும்.

வாழ்த்த வாயும்
  நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும்
  தந்த தலைவனை
சூழ்த்த மாமலர்
  தூவித் துதியாமல்
வீழ்தத வாவினை
  யேன்நெடுங் காலமே.

—

# மாவைக் கந்தன் தோத்திரம்

★

"அளவையூர் - சஞ்சீவி"

வெண்பா

மாமுகத்தை மாறவைத்தான் மாமரத்தைக்
  கூறுவைத்தான்
பாமருவு செந்தமிழின் பண்புரைத்தான் - ஓமருவு
தும்பிமுக னுக்கிளையான் சுந்தரிகள் பங்கினனை
நம்பினவர்க் குண்டே நலம்.

விருத்தம்

மலையரசன் பொற்பாவை மைந்தா போற்றி
வானவரை வாழவைத்த மணியே போற்றி
அலைகடல்நேர் அசுரர்குல மழித்தாய் போற்றி
அன்னைவள்ளி குஞ்சரியை அணைத்தாய் போற்றி
தலைமைபெறு செந்தமிழைத் தந்தாய் போற்றி
சற்குருவே ஆறுமுகத் தரசே போற்றி
கலைபயிலும் வரிவடிவேற் கையா போற்றி
கவின்பெறுகோ புரமாவைக் கந்தா போற்றி.

# நவராத்திரியும் கந்தசஷ்டியும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாககிருஷ்ண சதுர்த்தசியில் மஹா சிவராத்திரி குறிக்கப்பட்டதற்குரிய ஆதாரங்களை ஆராய்வாம.

பூர்வகாரணுகமம் சிவராத்திரி பூஜா விதிப்படலம 12-வது சுலோகத்தில், சூரியன் கும்பராசிக்குப் பிரவேசிக்கமுன் தைமாதக் கடைசியில் பூஜிக்க வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கிறது.

இக்கூற்றை ஆழ்ந்து சிந்திக்குமிடத்து பூர்வகாரணுகமம் இயற்றியவரும் (சௌரமான) மாசி மாதத்தில் வர வேண்டிய (சாந்திரமான) மாகமாதம் சில காலங்களில் அவ்விதம் இசைந்து வராது தை மாதத்தில் வரப்பெறுவதால் அம்மாதத்தில் இருக்கப்பெறும மாககிருஷ்ண சதுர்த்தசியில் சிவராததிரி கொள்ளப்பட வேணடு மெனக் கருதியே அவ்விதம் கூறினுரென்பது தெளிவாகிறது.

நாரதஸம்ஹிதையில் அர்த்தராத்திரி சம்பந்தமுடைய மாக கிருஷ்ண சதுர்த்தசியில் யாவனொருவன் சிவராததிரி விரதம் அனுட்டிக்கிருனே அவன் அஸ்வமேதயாகததுக்கு ஒப்பான பலனையடைவான் எனவும், காமிகாகமம், உத்தரபாகம சிவராததிரி பூஜா விதிப்படலம் 4-ம், 5 ம சுலோகங்களில், மாக மாதத்திலே கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி வருகிற இரவு சிவராத்திரியாகும. (அது) எல்லாப் புண்ணியங்களையும் நன்மைகளையுந்தருவது. அந்த நாளில் சிவாலயத்திலே சிவலிங்கத்திற்குப் பூஜை செய்யப்பட வேண்டும். எனக் கூறப்பட்டிருப்பதின் கருததை நோக்குமிடத்து மாகமாதமே சிவராத்திரிக்கு விசேடமுடையதென்பது புலனுகிறது.

இக்காரணங்கள்பற்றியே பஞ்சாங்க கணிதர்கள் (சௌர மாசியில் வரும் சாந்திரமாச பால்குன கிருஷ்ண சதுர்த்தசியிற் குறிக்காது தை மாதத்தில் வரும் மாக கிருஷ்ண சதுர்த்தசியில் மஹா சிவராததிரியைக் குறிக்கலாயினர்.

மேலும் இந்திய அரசினரால் தமிழ், மலையாளம, கனடைம், மராத்தி, குஜராத்தி, ஸம்ஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம, உருது, வங்காளி, ஏரியா, தெலுங்கு ஆகிய பாஷைகளில் வெளியிடப்படும் ராஷ்டிரீய பஞ்சாங்கங்களிலும், புரட்டாதி 2உ புதனகிழமை நவராத்திரி ஆரம்பமும, 30உ புதனகிழமை தீபாவளியும், கார்த்திகை 2உ ஸ்கந்தஷஷ்டி ஆரம்பமும், தை 29உ செவ்வாய்க்கிழமை சிவராததிரியும குறிக்கப்பட்டிருத் தலையும, அரசாங்க விடுமுறை நாட்களும் அவ்வாறமைந்திருத் தலையும் காணலாம்,

ஆகவே, தேவஸ்தான அதிகாரிகளும மற்றையோரும் மேற்குறிக்கப்பட்ட திகதிகளில், அந்தந்த விரதங்களை அனுஷ்டிப்பதே சாஸ்திர சமமதமாகும்.

சி. சுப்பிரமணியஐயர்,
மட்டுவில்.

## காரைக்காலம்மையார்

யாழ். நாயன்மார்கட்டு பேச்சியம்பாள் என வழங்கும் ஸ்ரீ இராசஇராசேஸ்வரி அம்பாள் கோவிலில் 6-ம் திருவிழாவாகிய இன்று (19-7-63 வெள்ளிக்கிழமை) யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில யாழ் சைவபரிபாலன சபை சமயப்பிரசாரகர் திரு. க. முருகேசு அவர்கள் காரைக்காலம்மையார் என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம் நிகழ்த்துவார்கள். எதிர்வரும் 23-7-63-ல் தேர் தீர்த்த உற்சவங்கள் நிகழவிருக்கின்றன.

—

# கும்பாபிடேகமா குடமுழுக்கா?

திருக்கோயில்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் இருத்தல் வேண்டும், "திருக்கோயிலில்லாத திருவிலூரும்" என்பது அப்பர் திருவாக்கு. ஆலயம் என்பதும் திருக்கோயில் என்பதும் ஒன்றுதான். திருக்கோயில என்பது மோட்ச இலக்குமியை அளிப்பது; முதல்வரின் இல்லம். ஆலயம் என்பது ஆன்மாக்கள் வழிபாடு செய்து பிறவியினீங்கி இறைவருடன் அத்துவிதமாதற்குரிய இடம். விக்கிரகங்களைத் தானியத்திலும், பின் ஜலத்திலும், இட்டு வைப்பதுடன், பின் எணணெய்க் காப்பிட்டும பல கிரியைகள் செய்யப்படும். இந்த முறைகள் சிலா விக்கிரகங்களுக்குரியன. கும்பாபிஷேகம என்பது பொருத்தமான பெயர் குடமுழுக்கு என்பது பிழை. தனித்தமிழ்ச்சொல்லபிமானிகள் குடமுழுக்கு என்பர். நடராஜரை அம்பலவாணர் என்பர்.

பிரமஸ்ரீ.
வ. மு. இரத்தினேஸ்வரையர்

கோயில்களில் கும்பங்கள் வைத்துப்பூசித்து அபிஷேகிக்கப்படும. இவை மக்கள் வீடுகளில்வரவேற்பில்வைக்கும் வெறும் கும்பங்கள் போன்றன அன்று. கோயில்களிலுள்ள கலசம் போன்ற ஸ்தூபிகளுக்கு அபிஷேகிக்க வைத்துள்ளதனுல் குடமுழுக்கு என்று சொல்லலாம என்பது சிலர் கருத்து. உண்மையில் அக்கிரியைகளின் தத்துவமுணராதவர்கள் பலவுஞ் சொல்லலாம். கும்பங்களை ஆகமங்களில்கூறியமுறைப்படி தாபித்துப் பூசித்து வருகிறார்கள். பிரபல ஆலயங்கள் இந்தியாவிலும இலங்கையிலும் இருக்கின்றன கும்பாபிஷேகம என்றே பெரியோர்கள் கூறி வருகிறார்கள். கும்பங்கள் மந்திர பூர்வமாகவே ஆலயங்களில் வைக்கப்படுகின்றன. எல்லாம் சமம் என்பது நான்முறை தெரிந்தார் கருத்தன்று. சைவசமயிகள் என்று தம்மைக் கூறுதும், சிவசின்னமணியாதும் வீண் ஆடம்பரஞ்செய்பவர் சிலர் இடத்துக்கு ஏற்றபடி நடிக்கின்றனர்,

கும்பத்திலே போர்த்த வஸ்திரம் தோலாகவும், கும்பத்திலே சிவப்பேறப் பூசிய மண் இரத்தமாகவும், குடத்துமண் மாம்சமாகவும், கும்பத்தில் நிறைந்த ஜலம் மேதஸாகவும், தர்ப்பையினுலேசெய்த கூர்ச்சம் எலும்பாகவும், நாற்புறமுஞ் சுற்றப்பட்ட நூல் நரமபாகவும், கும்பத்துட் போடப்பட்ட சுவர்ண புஷ்பம சுக்கிலமாகவும் நியசிக்கப்பட்ட மந்திரம் உயிராகவும் கீழே இடப்பட்ட நெல, அரிசி, எள், பயறு, உழுந்து, துவரை, கோதுமை என்னும் ஏழ்வகைத் தானியங்களும் ஆசனமாகவும் சொலலப்படும். அரியதத்துவமான ஆகமக் கிரியைகளை விடுத்து ஏதோ வாயில் வந்தன வந்தன கூறுவதும் எழுதுவதும் ஏகான்மவாதமுகிழ்ப்பேயாகும். சிவபதம வரயில் வர அஞ்சுங்காலம். பல கூறுவதற பயனில்லை. கொடியேற்றத்தின் தத்துவம் முப்பொருளுணமை காட்டுவதாம்.

கொடிமரம் சிவம் என்றும் இடபம் எழுதப்பட்ட சீலை ஆன்மா என்றும், தர்ப்பைககயிறு பாசம்என்றும் ஆகமங்கள் கூறும். மந்திர ந்யாசங்கள் இன்றி நிததிய நைமித்திகாதிகள் செய்யவேண்டு மென்பது தலைவிதியே.

சுபம்.

—

# சேற்றை வாரிப் பூசுவதா?

"ஆலயம் புனிதத்தன்மை வாய்ந்தது. அதனை நாம் உணராமல் கோவிலகளில் களியாட்டங்களுக்கு முதல் இடம் கொடுத்து நேரத்தையும் பணத்தையும வீண் செலவு செய்கிறோம். நமது முன்னோர்கள் பின்பற்றிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினுலும், கோவிலில நடக்கும களியாட்டம், சதிர்க் கச்சேரி, வாணவேடிக்கை போன்ற செயல்களினுல் நாம் குளிக்கப்போய் சேறறை வாரிப் பூசிக்கொள்கிறோம. இதனுல் நாட்டில் பஞ்சம் வறுமை போன்ற தீமைகள் வளர்கின்றன.

சக்தியைத் தெய்வமாக வழிபடும் பெருமை சைவப் பெருமக்களுக்கே உண்டு. இறைவனைத் தோழனுகவும், தந்தையாகவும் குருவாகவும் நணபனுகவும் வழிபட்டார்கள் நாயன்மார்கள். நாயன்மார்கள் காட்டிய வழிகளை நாம் பின்பற்ற வேண்டும்".

நாயன்மார்கட்டு பேச்சியம்மன் என வழங்கும் ஸ்ரீ இராச இராசேஸ்வரி ஆலயததில் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற சமயப் பிரசங்கத்தினபோது மேற்கண்டவாறு ஆசிரியர்திரு சி.கனகநாயகம அவர்கள் குறிப்பிட்டார்.

—

## கதிர்காமம்

எதிர்வரும் 21-7-63 இல் கதிர்காமத்தில் கொடியேறித் திருவிழா தொடங்கி தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் 21-7-63 — 27-7-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தம்பி தங்கைகள், மிக உதவுவர் எதிரிகளுக்கு இன்னலும் நிச்சயம். நிலபுலங்களால இலாபமும் உண்டாம் ஆனல் மன நிம்மதி இருக்காது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

பண இலாபம் நிச்சயம். பழைய முதலீடுகள் நற்பலனைத்தரும். சிறு உடல் நிலைக் குழப்பங்கள் உண்டாம். வயிறுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. தந்தைவழி உறவினர் தொல்லைதருவர்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். உமது சொந்தப்பிரச்சினை சில தீர்வுறும், இனத்தவருடன் மோதல்களுக்கு இடமுண்டு வேலைவழமையில் சில மாற்றங்களுக்கும் இடமுண்டு

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

பணமளவில் நல்ல வாரம். நிலபுலங்களால் இலாபமும் உண்டாம். எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம். ஆனல் குடும்பத்தகராறும் உண்டாம். சிறு உடல் நிலைக் கோளாறுகளும் ஏற்படலாம்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சண்டைகளைக் கட்டிக் கொள்வதில் முந்திநிற்பீர். கண்ணோய்களுக்கு இடமுண்டு பணமளவில் ஓரளவு சாதகமான வாரம். போட்டியிடுவோரை நீர் வெல்வது நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நல்ல வாரம். தடைகளைத் தாண்டிவிட உயமல் முடியும், பண இலாபமும் புகழும் நிச்சயம் ஆனல உடல் நிலை ஊறுபடும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இனத்தவருடன் மோதல்களுக்கு இடமுண்டு, உமது எண்ணப்படி நடந்துகொள்வது கடினமாயிருக்கும். பணமளவில் நல்ல வாரம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாயத்தினுல் இலாபம் நிச்சயம். புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனல் வெற்றிபெறும். சகோதரர்கள் மிக உதவுவர். தந்தை வழி உறவினர் தொல்லை தருவர்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்ப நிலையில் திருப்தியீனம், உடல்நிலைக் கோளாறு என்பன உண்டாம். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். புது முயற்சிகள் ஓரளவு வெற்றியானவை, ஞாயிறு திங்கள் எச்சரிக்கையோடு கழிய வேண்டும்;

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

பல கண்டனங்களை நீர் சந்திக்கவேண்டிவரும். தந்தைவழி உறவினரால் தொல்லை உண்டாம், தூற்றித்திரிவோர் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும் குடும்பத்தகராறுகளுக்கும் தடையில்லை, செவ்வாய் புதன் வியாழன் மாலை எச்சரிக்கையாகக்கழியவேண்டும்

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணமளவில் நல்ல வாரம் எதிரிகளுக்கு இடையூறும், உமக்குப்புகழும் நிச்சயம். ஆனல் உடல்நிலை ஊறுபடும் அலுவலகத்தில் சண்டைகளும நிகழலாம், வியாழன் மாலை, வெள்ளி, சனி எச்சரிக்கையோடு கழியவேண்டும்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்பத் தகராறுகளும் உண்டாம். உடல் நிலையும் ஊறுபடும். நண்பர்கள் இடரிலிருந்து காப்பர். பழைய முதலீடுகள் நற்பலனைத்தரும் சனி மாலையை எச்சரிக்கையோடு கழிக்குக.

## ஜிந்துப்பிட்டியில் சமயப் பிரசாரம்

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 21-7-63 ஞாயிற்றுக்கிழமை உயர்திரு வே. சிவஞானம் அவர்களால் பண்ணமைந்த தேவார இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

28-7-63 ஞாயிற்றுக்கிழமை "கலியுக வரதன்" என்னும் பொருள்பற்றி உயர்திரு P K. சுப்புசுவாமிப்பிள்ளையவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## கோட்டு விற்பனவு வளம்பரம்

கொக்குவில் தற்பொழுது வட்டுக்கோட்டை
(1) துரையப்பா விஸ்வநாதனும்
(2) பெண் ஜீவநாயகியும்
-வழக்காளிகள்.

இல M B 3965
எதிராக
கொக்குவில்
சின்னையா துரைராசா
எதிராளி.

யாழ்ப்பாணம்டிஸ்திறிககோட்டின் M B 3965 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணி 1963 ஞு ஆடி மீ 27 ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை; முதல்வட்டி ரூபா 4840 உம் 20-3-61 தொடக்கம் 5-10-61 வரைக்கும் 12வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 224-95 உம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோயிற்பற்று கொக்குவில் கிழக்கு 'விளைதகதுமுடித்தான்" பர நில இலா 5½ (ஐங்கரை) வீடு செய்பயிர்கிழக்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு தாமோதரம் பிள்ளை கைம்பெண் செல்லாச்சியினதும் அருணசலம் நமசிவாயம் ஆகியவர்களினுதனம். வடக்கு கையொழுங்கை, மேற்கு வாய்க்கால் தெற்கு செல்லததுரை கைம்பெண் நாகம்மாவின் உருததாளிருதனம்.

செ. விசாகரெத்தினம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
135 பருத்திகதுறை ரோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்,
8-7-63,
M 73 19-7-63

நல்லைக்கீர்த்தனம் — 40.

## மறந்துயிர் வாழ்வேனே?

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : காமவர்த்தனி : தாளம் : ஆதி

பல்லவி

மறந்துயிர் வாழ்வேனே? மயில்வாகனு
மறந்துயிர் வாழ்வேனே?

அனுபல்லவி

பிறந்துலகினில் நான் புரிந்தபிழை மன்னித்த
திறந்தனை எண்ணிமனம் இரங்கினேன்ஐயா உன்னை

சரணம்

அன்பருக்குன்னை யல்லால் ஆறுதல் ஏதுமில்லை
உன்பதம் அன்றியிந்த உலகினில் தஞ்சமில்லை
இன்பமே என்னுயிரே எழில்முருகையா நல்லை
நன்பதி மேவிவாழும் நாதா மறப்பேனில்லை,

## இளைஞர் முன்னேற்றக்கழக இரவுநேரப் பயிற்சி

13-7 63-ல் கச்சேரி நல்லூர் வீதியில் 51-ம் இலக்க இல்லத்தில் நல்லூர் தெற்கு சன சமூக நிலைய ஆதரவில் தீவுப் பகுதிகளின் கிராம அதிகாரி திரு. சாமுவேல் தம்பையா அவர்களின் தலைமையில் ஓர் இரவு நேரப் பயிற்சிமன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அவர் அப்பயிற்சி மன்றத்தை ஆரம்பித்துப் பேசுகையில் இவ்விதமான பயிற்சி மன்றங்கள் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றும், அவ்விதமான பயிற்சி மன்றத்தை ஆரம்பித்து வைத்ததை வெகுவாகப் பாராட்டுவதாகவும கூறி, குத்துவிளக்கேற்றி இம்மன்றத்தைத் திறந்து வைத்தார்.

நல்லூர் தெற்கு அரசினர் கலவன் பாடசாலை மாணவிகளால் வரவேற்புப் பாடல்கள் பாடப்பட்டன. வடபிராந்திய உதவி வித்தியாதிபதி உயர்திரு S. U சோமசேகரம் அவர்கள் பேசுகையில் இவ்விதமான பயிற்சி மன்றம் இக்கிராமத்திலுள்ள வாலிபர்களின் நன்மையைக் கருதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்த நற்கைங்கரியத்தைவிடாது தொடர்ந்து நடத்துவார்களெனத் தாம் எதிர்ப்பார்ப்பதாகவும இப்பயிற்சிமன்றத்திற்குத் தாம எதுவித உதவிகளையும் செய்வதாகவும் உறுதி கூறினர். யாழ்ப்பாணப் பிரதிநிதி உயர்திரு அல்பிறட் துரையப்பா அவர்களும் பேசினர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய்
1. சின்னத்துரை கனகசபாபதியும் பெண்
2. சிவபாக்கியமும்
—வழக்காளிகள்.

இல, M.B. 4051.
எதிராக
மானிப்பாய்
1, கார்த்திகேசு கணபதிப் பிள்ளையும் பெண்
2. பகவதிப்பிள்ளையும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B 4051-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிககப்படும் ஒருதுண்டுக காணியை 1963-ம் ஞு ஆவணி மீ 17 உ சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 7518-33 சதமும் 5-6-61 தொடக்கம் 11-10-61 வரைக்கும் ரூபாய் 5000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 254-10 சதமும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோயிற்பற்று மானிப்பாய் இறை "சுந்திப்பளை" பர,நில,இலா, 5-ம் குளி12 3/16-ம் கல்வீடும், எல்லை கிழக்கு கலொக் குமாரசாமியின் ஆதனமும், கிணற்றுக்குப் போகும் ஒழுங்கையும், வடக்கு சங்கரபபிள்ளை குமாரவேலுககும் பெண் நாகம்மாவுக்கும், மேற்கு வல்லிபுரம் கந்தையாவுக்கும், மறுபேருககுப் உரிய ஆதனம், தெற்கு கந்தர் கதிரேசுககும், கலொக் குமாரசாமிககும், பங்காளருக்கும் உரிய ஆதனம், இடைக்கலும் கிணற்றில் பங்கும், வழி வாய்க்கால் பாவிப்புரிததும்.

அ. ஜெகநாதன்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
16 A அம்மன்ரோட்.
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
M 83 19-7-63.






## தனி மனித சுதந்திரம் காக்க!

—0—

இந்துசமயம், தமிழ்மொழி, தமிழ்ப் பண்பு, கலாச்சாரங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியையே தமது நோக்கமாகக்கொண்டுள்ள விவேகானந்த சபையினர் இந்த நாட்டில் ஒற்றுமை நிலவவும், உலகியல், ஒழுக்கம், ஆத்மீகம் ஆகிய துறைகளில் தனிமனிதன் சுதந்திரம் பாதிக்கப்படாமல்இருப்பதற்கும் உள்ள ஒரே வழி தமிழ் மொழிக்கும்நாட்டின் பொது நிகழ்ச்சிகளிலும் அரசாங்கப் பணிகளிலும், கல்வித்துறைகளிலும் சம இடம் அளிப்பதேயாகும் எனும் பொருள்பட அறிக்கை ஒன்று வெளியாக்கியுள்ளது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்
சின்னத்துரை பொன்னையா
வழக்காளி,

இல M B 4763
எதிராக
இளவாலை முல்லானை தற்போது இல 20, கேல் ஒழுங்கை தையிப்பிங்.
1. சிவகுரு சபாரத்தினம்
2. பெண் சரஸ்வதி
-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டில் M B 4763 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1963 ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 14 ம் திகதி (14-9-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதலவட்டி ரூபா 3720-50 ம், இதில் ரூபா 2000-க்கு 18-4-62 திகதி தொடக்கம் 1-11-62 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும், பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100ககு 5வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 260-55 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று சிறுவிளானிறை "மூள்ளானை" நிலப்பரப்பு (3 1/3 ம்) வீடுகளும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு கந்தப்பிள்ளை செல்லப்பாவுக்கும், நாகையா பெண் ஆசைப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு ஒழுங்கை முகப்பும் கந்தப்பிள்ளை சிவகக்கொழுந்துவின் உருமைக்காரருக்குமூரிய ஆதனம் மேற்கு கீழே குறிக்கப்படும் 2ம் ஆதனம். தெற்கு தம்பர் சின்னத்தம்பியின் உருமைக்காறருக்கும் கதிராமன் கைம்பெண் அன்னப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். இதில் சொரியலாய் நாலில் ஒருபங்கும் வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வைப் பங்கும் வழிவாய்க்காலும் இன்னும் வடக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லையருகாகப் பாதையுரித்தும். முற்பதிவு E 299/116.

2, மேற்படி சிறுவிளானிறை 'மூள்ளானை' நிலப்பரப்பு 3¼ ம் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு மேலே குறிககப்பட்டிருககும் 1ம் ஆதனம், வடக்கு கந்தப்பிள்ளை சிவககொழுந்துவின் உருமைக்காறருக்குரிய ஆதனம். மேற்கு சின்னத்தம்பி நாகலிங்கத்தின் ஆதனம். தெற்கு தம்பர் சின்னத்தம்பியின் உருமைக்காறருக்குரியஆதனம். இதில் சொரியலாய் அரைவாசியும். வடக்கெல்லைக்காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும். தூர்வைப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 24-6-1963.
M. 79 19-7-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## COMMISSION SALE
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு வழக்கு

இல. 6194.

வழக்காளி:
1. வல்லிபுரம் சிவசிதம்பரம்
2, வல்லிபுரம் மகள் சிவசோதி மலர் இவர்கள் இருவரும் பராயமற்றவர்கள், பராமரிப்புக்காரன் ஆள்வாப்பிள்ளை விலயினுர் துன்னலை தெற்கு.

எதிராக:
எதிரிகள்:
1. பருத்தித்துறை, விஞயக மூர்த்தி மயில்வாகனம்
2. இருபாலை, வேலாயுதம்பிள்ளை சிவகுருநாதர், தற்காலம் கல்லோயா விஸ்தாரிப்பு நிலயம் அம்பாறை (Gal Oya Development Board, Amparai)
3. ஷை பெண் இராசநாயகி.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் காணும் ஆதனங்கள் 1963-ம் ஆ புரட்டாதிமீ 7-ந௨ (7-9-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிளிடமாக இருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன இடாப்பு:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயில்பற்று. பருத்திததுறை மழவாய குறிச்சியிறை "கோம்பைக்கலட்டி" வில. பர. 14¾. இதுவும் பருத்தித்துறை சிங்கபாகு தேவன் குறிச்சியிறை "திணைக்கலட்டி." வி.பர 9⅜. இதுவும் தற்காலம் ஒரே துண்டாயிருக்கின்றன. இதற்கு உலாந்தா மேஸ்தர் கதிர்காமர் கணபதிப்பிள்ளையால் 1932-ம்ஆ பங்குனிமீ 25-ம௨ 5764-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி வி.பர. 25 குளி 3 26/32, இதில் குறித்த படத்தில் 3-ம் நம்பர்த்துண்டுக்கு வில. பர, 4 குளி 18/32-ம், இதற்குட்பட்ட புதிதாய்க்கட்டிய கல்வீடு, குசினி (Garage) கட்டிடம் பனைகள் தென்னைகள் கிணறு இன்னும் இதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு குறித்த படத்தில் கண்ட 4-ம் நம்பர் துண்டு. வடக்கு ஒழுங்கை, மேற்கு குறித்த படத்தில கண்ட 2-ம் நம்பர் துண்டு. தெற்கு வயிரவிப்பிள்ளை சீனியருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும்.

2, ஷை யிறை வென்றிபாகு தேவன் குறிச்சியிறை "சல்லிமணல்" வி. பர, 32 குளி 1 7/8. இதில் வி, பர. 6 குளி 4 3/8, இதில் வடக்குப்புறமாக மூன்றிவிரண்டு பங்குக்கு வி. பர. 4 குளி 2 11/12. கல்வீடு, கிணறு தென்னைகள், பனைகள், வேப்புகளும், எல்லை கிழக்கு நீக்கிலான் சகாயனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு நாகலிங்க முதலியார் வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு சக்கரியஸ் பெண் சவீனம்மாவின் உரிமைக்காரருக்குடைய ஆதனம், இவ்வெல்லைகுட்பட்டவை முழுவதும்,

3, தெற்குப்புறமாக மூன்றிலொரு பங்குக்கு வி. பர. 2 குளி 1 1/24-ம். புதிதாய்க் கட்டப்பட்ட கல்வீடு. தென்னைகளும், எல்லை கிழக்கு நீக்கிலான் சகாயனுக்குரியவாதனம், வடக்கு மேற்கூறிய 2-ம் ஆதனம், மேற்கு ரோட்டு. தெற்கு மரியாம்பிள்ளை பாவிலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் என்னுல் கட்டப்பட்ட கல்வீடு நிந்தமாகவும் நிலம் தென்னைகளில் சொரியலாய் எட்டிலேழு பங்தும்,

| | |
|---|---|
| தீர்வைத்தொகை:- | 28,545-00 |
| வட்டி 8வீதம் 2700-00 ரூபாவுக்கு 26-11-58 தொடக்கம் 29-5-59 வரை | 680-00 |
| வட்டி 5வீதம் 29,225-00 ரூபாவுக்கு 29-5-59தொடக்கம் இறுக்கும்வரை | 658-00 |
| செலவு பணத்தில் ஓர் பகுதி | 300-00 |
| மொத்தம் | 30,183-00 |

கா. முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
சந்நிதிவேல்
பருத்தித்துறை, 19-6-63.
M 65. 19-7-63.


# எஃப். ஜீவாஜி சகோதரர்கள்
## மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பேனை, பலவித மட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்,
ஜுபிலி பஜார், இலக்கம் 9, (ராணி சினிமாவுக்கருகில்)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்:
ஜீவாஜி சகோதரர்கள்,
50. புதிய சோனகதெரு கொழும்பு-12

கிளை:
இன்டிப்பென்டன் ரேடிங்கொம்பனி,
51A, 1-ம் குறுக்குத்தெரு
கொழும்பு – 11

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12,


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியகடை
இராமநாதர் சீனிவாசம்
வழக்காளி.

இல M B 4263
எதிராக
தெல்லிப்பழை கிழக்கு
தம்பாப்பிள்ளை சரவணமுத்து
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 4263 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுககாணியை 1963 ம் ஹூ ஆடி மீ 27 ௨ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்னின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 2404-60 ம் 18-9-61 தொடக்கம் 29-8-62 வரைக்கும் ரூபா 1340-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைககும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 218-94 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று வீமன்காமம் இறை "அம்படைஅப்பை" பரநில இலா 10½, ஆனல் அளந்து கொண்டபடி பரநில இலா 8ம் குளி 1 ம் எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கை. வடக்கு வேலாயுதர் முருகருக்கும் மறுபேருக்கும்உரிய ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை பெண் கற்பகத்துக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் பரநில இலா 1-ம் குளி 10-ம். ஆனல் ஆட்சிப்படி பர நிலா 2 1/4 ல்.

அ. ஜெகநாதன்
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்.
16 A, அம்மன் ரோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
M 82 19-7-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காங்கேசந்துறை வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
சுலைமான்கண்டு சுல்தான்
அப்துல் காதர்
—வழக்காளி.

வழக்கு இல. M,B. 4028
எதிராக

யாழ்ப்பாணம் பட்டினம்
1, அல்பிறெட் எட்வேட் தம்பர்
2, ஹெறேடிஸ் றெஜினுல்ட் துரைரத்தினம் தம்பர்
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 4028-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக காணிகள் 1963-ம் ஆண்டு ஆவணி மாதம் 24-ந் திகதி (24 - 8 - 63) சனிககிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலததல் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 7450-ம், 24-1-1961 தொடககம் 6 - 12 - 1961 வரைக்கும் ரூபா 4000-க்கு மாதாந்தம் ரூபா 60 வட்டியும், அதன்பின் முழுததீர்வைத் தொகைககும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 298-ம்,

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக, யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோயிற்பற்று. கரையூர் இறை, பிரதான வீதி, "உடையாந்தறை" நிலப் பரப்பு கிட்டததட்ட 6. வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். மற்றும் அதற்குரிய உடைமைகளும். எல்லை கிழககு டாகடர் V. N. ஜோன்புள்ளேயின் ஆதனம். வடககு சப்பல் வீதி. மேற்கு எலிசபெத இராசம்மா, திசவீரதிங்கி, திருமதி சவிரிமூதது ஜோசேப், டாக்டர் A. இராசசிங்கத்துககுமுரிய ஆதனங்கள். தெற்கு பெரிய தெரு இதில் சொரியலாக நாலிலொரு (1/4) பங்கும் அதன் உடமைகளில் அதற்குரியபக்கும்- D, 246/156 ல் பதியப்பட்டது.

2, ஷை கரையூர் இறை, 'உடையாந்தறை'' நிலப்பரப்பு 6, வீடும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும் மற்றும் அதற்குரிய உடமைகளும். எல்லை கிழககு டாக்டர் V. N. ஜோன் புளளேயின் ஆதனம், வடக்கு சப்பல் வீதி மேற்கு எலிசபெத இராசம்மா, திசவீரசிங்கி, திருமதி சவிரிமூத்து ஜோசேப், டாகடர் A, இராசசிஙகத்துக்குமுரிய ஆதனம். தெற்கு பெரிய தெரு. இதில் சொரியலாக நாலிலொரு (1/4) பங்கும் அதன் உடமைகளில் அதற்குரிய பங்கும். இக் காணி [illegible] J. பற்றிக் அவர்களால் எழுதப்பட்டு D. 246/156-ல் பதியப்பட்ட 24-81955 திகதி உறுதி இல. 1975-ன்-படி ரூபா 4000-ம் வட்டியும் கொண்ட முதலாவது ஈடு உண்டு.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
மல்லாகம் 5-7-63,
M 74, 19-7-63.


யாழ்ப்பாணம்
# ஐக்கிய இலாப நிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Sdt. 1⁄


## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை மேற்கு கொட்டடி
1. சின்னையா மகள் பாக்கிய இலட்சுமி —வழக்காளி.

இல M B 4659

எதிராக

1. காலம்சென்ற வயிரவி சின்னப்பொடி
2. பெண் சின்னப்பிள்ளை
3. வீரவாகு செல்லையா நல்லதண்ணீர்க் கிணற்றடி வண்ணார்பண்ணை மேற்கு
4. பெண் பார்க்கியம் 1ம் எதிராளியின் பதில் எதிராளி.
-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4659 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக காணி 1963 ஹூ ஆவணி மீ 31ந் திகத சனிக்கிழமை முற்பகல் 9½ மணி தொடககம் அந்தக் காணிககுள் நின்று பிரசித்தஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்ரூபா 5025. இதில் ரூபா 3000 ககு 28-2-1962 திகதி தொடக்கம் 21 – 8 – 1962 திகதி வரைககும் 18 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும்வரைக்கும் 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 315-60 இதில் ரூபா 175 கொடுபட்டது.

காணிவிபரம்

1. வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்குஇறை வெள்ளை சூரிதரையும் வெள்ளை சூரிவயலும நிலப் பரப்பு 4 குளி 5 7/10 வீடுகளும் கிணற்றில் பங்கும் வான்பயிர்களும் எல்லை கிழக்கு பண்ணை ரோட்டும் சின்னவி அப்புத்துரைக்கும் பெண் கமலாட்சிககும் உரிய ஆதனம். வடககு புண்ணியம் கைம்பெண் நாகமுத்துவுக்கும் உரியஆதனம், மேற்கு குளம் தெற்கு S. சோமசுந்தரஐயருக்கும் மற்றுவர்களுக்குமுரிய ஆதனங்கள். பதிவுஇலக்கம் D243/67 இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி,
8-7-1963.
M 75 19-7-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 3257.

1. அப்பாக்குட்டி செல்லையாவும் மனைவி
2, காந்திமதி – ஏழாலை.
—வழக்காளிகள்.

எதிராக
செல்வநாயகம் அரியநாயகம் தனக்காகவும், காலஞ்சென்ற இவர் மனைவி கிறேஸ் நேசமணியின் ஆதனங்களுககுத் தக்தவகாரனுகவும்,-கொககுவில் கிழக்கு
—எதிரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு M, B. 3257-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு ஆவணிமாதம் 24-ம் திகதி சனிக்கிழமை காலை (24-5-63) 10½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 9308-ம் 22 – 2 – 60 தொடக்கம் 7-3-62 வரையில் ரூபா 7000-க்கு 7 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்ருக இறுபடும் வரையில் முழுத் தீர்வைத்தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 298-ம். இதில் ரூபா 200 செலவால் கொடுபட்டது,

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயில்பற்று கொககுவில் கிழக்கிறை "கருவெலடி" நிலப்பரப்பு 6 குளி 15 3/8, உறுதிப்படி நிலப்பரப்பு 9 3/8. ஆனல் P. இராமனுதன் அளவைக்காரன் அவர்களால் 1943-ம் ஆண்டு ஆவணிமாதம் 7-ம் திகதி தயாரிக்கப்பட்ட 576 - ம் இலக்கம் கொண்ட படத்தின்படி நிலப்பரப்பு 10 குளி 8½. இதில் தெற்குப்பக்கமாய் நிலப்பரப்பு 6 குளி 15 3/8-ம், வீடும், குசினியும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். இந்த நிலப்பரப்பு 6 குளி 15 3/8-க்கு எல்லை கிழககு ஒழுங்கை, வடக்கு ஒறியெல் முத்தையாவினதும் மனைவிடாளின் தங்கரத்தினத்தினதும் ஆதனம், மேற்கு ஒறியெல் முத்தையாவினதும் மனைவி தங்கரத்தினத்தினதும் பொன்னுச்சாமி சட்டநாதனினதும் ஆதனம், தெற்கு வெள்ள வாய்க்காலும் ரோட்டும். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 11-7-63.
M. 78 19-7-63,

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, [illegible] இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 19-7-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: தம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org